<u>திருச்செங்கோடு நகராட்சி</u>

<u>நகர் மன்ற கூட்ட நடவடிக்கை தீர்மானம், நாள்.07.04.2022 ன் உண்மை நகல்</u>

**பொருள் எண்.1**

சொத்து வரி / காலிமனைவரி பொது சீராய்வு செய்வதற்கான வழிகாட்டுதல் குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 01.04.2022 முதல் சொத்துவரி/ காலிமனைவரி பொது சீராய்வு செய்ய வெளியிடப்படட அரசாணை (நிலை) எண்.52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை, நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**<u>கோப்பு எண். 2319 /2022/அ1</u>**

**<u>நகர் மன்ற தீர்மானம் எண்.81 , நாள்.07.04.2022.</u>**

பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.2**

தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15–வது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் ( Floor rate i.e.Rate of Taxation) எவ்வளவு என அறிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்துவரி /காலிமனை வரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை (நிலை) எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.07.2018 மற்றும் அரசாணை (நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்துவரி /காலிமனை வரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை (நிலை) எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.11.2019–ன் படி சொத்துவரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்துவரி/காலிமனை வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்துவரி /காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்துவரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பல மடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொதுமக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15–வது மத்திய நிதிக்குழுவின் மானியம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதிபெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்துவரி/காலிமனை வரி

சீராய்வு செய்யலாம் என சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளுவதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்துவரி /காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு(01.04.2022) முதல் சொத்துவரி சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்துவரி /காலிமனை வரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்துவரி /காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு , அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1,நாள்01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சொத்துவரி:**

**குடியிருப்பு கட்டடங்கள் (Residential Building):**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கான காரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601–1200 | 1.5 |
| 1201–1800 | 1.75 |
| >1800 | 2 |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள் (Non Residential Building):**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கான காரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:

1. 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25 % சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
2. 601 முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
3. 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
4. 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
5. வணிக பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

6. தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

**<u>காலிமனை வரி சீராய்வு</u>**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்துவரி விதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**<u>தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு</u> :**

ஏற்கனவே உள்ள சொத்துவரி/காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி /காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள் தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும் மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும், திருச்செங்கோடு நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ.எண் | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி (Current Liabilities) (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின் கட்டணம் | 16.70 |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | 1.81 |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம்(டுபிட்கோ, டுபிசெல் ,பிற) | 9.31 |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஓய்வுக்கால பணப்பயன் , ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி, நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் (நிலுவைத்தொகை) | 3.60 |
| | மொத்தம் | 31.42 |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதியஉயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்க்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 பிரிவு 81 – A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில்

குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், 01.04.2022 முதல் திருச்செங்கோடு நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்துவரி /காலிமனை வரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ளவும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது:-

1. 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25 % சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2. 601 முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
3. 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
4. 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
5. வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
6. தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
7. காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.
8. ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி /காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

**அலுவலகக் குறிப்பு :**

01.04.2022 முதல் சொத்துவரி மற்றும் காலிமனைவரி பொது சீராய்வு செய்து கொள்ளவும், அதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>கோப்பு எண். 2319 /2022/அ1</u>**

**<u>நகர் மன்ற தீர்மானம் எண்.82 , நாள்.07.04.2022.</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.3**

அனைத்து நகராட்சிகளுக்கும் தலைவர்கள் தேர்த்தெடுக்கப்பட்ட நிலையில், அவர்களுக்கும் மற்றும் அலுவலர்கள் பயன்பாட்டிற்கும் தேவைப்படும் வானங்கள் தேவைப்படும் பட்சத்தில், தேர்வு நிலை நகராட்சிக்கு போதுமான வாகனங்கள் உரிய கருத்துருக்கள் அனுப்புமாறு நகராட்சி நிர்வாகம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

திருச்செங்கோடு நகராட்சி, சேலம் மண்டலம், நாமக்கல் மாவட்டத்தில் அமையப் பெற்ற 25.20 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட தேர்வு நிலை நகராட்சியாகும். 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இந்நகராட்சியின் மொத்த மக்கள் தொகை 95335 மற்றும் தற்போதைய மக்கள் தொகை 109944 ஆகும். இங்கு 34000 வீடுகளும், 3026 வணிக கடைகளும், 33 வார்டுகளையும் கொண்டதாகும். மொத்த சாலைகளின் நீளம் 144.41 கி.மீ ஆகும். இந்நகராட்சியிலிருந்து 18 கி.மீ தொலைவில் ஆவத்திபாளையத்தில் ஒரு தலைமை நீரேற்று நிலையமும் மற்றும் இந்நகராட்சியிலிருந்து 33.61 கி.மீ தொலைவில் புள்ளாகவுண்டம்பட்டியில் ஒரு தலைமை நீரேற்று

நிலையமும் உள்ளது. தற்போது 2022 மார்ச் மாதத்தில் நடைபெற்ற நகர்புற உள்ளாட்சி தேர்தல்கள் மூலம் மக்களால் தேர்த்தெடுக்கப்பட்ட நகர்மன்றம் செயல்பட்டு வருகிறது.

தற்போது, திருச்செங்கோடு நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு 12 ஆண்டுகளுக்கு முன்னர் வாங்கப்பட்ட TN34 K 8237 என்ற எண் கொண்ட ஒரு ஈர்ப்பு வாகனமும் (பொலிரோ ஜீப்) மற்றும் TN34 T 0999 என்ற எண் கொண்ட ஒரு இலகுரக வாகனமும் (அம்பாஸ்டர் கார்) ஆகியவை உள்ளது. இவ்வாகனங்களின் பயன்பாட்டு விபரம் பின்வருமாறு:-

| வ. எண் | வாகனத்தின் வகை | வண்டி எண். | வாங்கப்பட்ட தேதி | எரிப்பொருள் வகை | ஒட்டப்பட்ட தூரம் கி.மீ | வாகனத்தின் தற்போது நிலை |
|---|---|---|---|---|---|---|
| 1 | BOLERO | TN34 K 8237 | 24.05.2010 | டீசல் | 450000 | 10 ஆண்டு / 1 இலட்சம் கி.மீ மேல் முடிவடைந்துள்ளதால் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு தொடர்ந்து பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. |
| 2 | CAR | TN34 T 0999 | 31.05.2010 | டீசல் | 150000 | 10 ஆண்டு / 1 இலட்சம் கி.மீ மேல் முடிவடைந்துள்ளதால் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு தொடர்ந்து பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. |

மேற்கண்டவாறு, தற்போது பயன்பாட்டில் உள்ள இரண்டு வாகனங்களின் ஆயுள் காலமான 10 ஆண்டு / 1 இலட்சம் கி.மீ முடிவடைந்து அடிக்கடி பழுது ஏற்பட்டு தகுதியற்ற நிலையில் தொடர்ந்து அதிக செலவு செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவதுடன், பயன்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளது. இதனால், நகரின் பொதுமக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகளை விரைவில் செய்து முடிக்க முடியாமல் உள்ளது.

நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர், ஆணையாளர், பொறியாளர்கள் மற்றும் துப்பரவு அலுவலர் ஆகியோர் நகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் பொதுமக்களின் அடிப்படை தேவை பணிகளான குடிநீர் விநியோகம், பொது சுகாதாரம், தெருவிளக்கு மற்றும் திட்ட பணிகள் ஆகியவற்றை அவ்வப்போது ஆய்வு செய்து கண்காணிக்கவும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு கூட்டத்திற்கும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் அலுவலக ஆய்வு கூட்டங்களுக்கும் உரிய நேரத்தில் சென்று கலந்து கொள்ளவும் தற்போது உள்ள வாகனங்கள் பயன்படுத்தி உரிய நேரத்திற்குள் சேர இயலாமல் சிரமமான சூழ்நிலையில் இருந்து வருகிறது.

எனவே, திருச்செங்கோடு நகராட்சி நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர், ஆணையாளர், பொறியாளர் மற்றும் துப்பரவு அலுவலர் ஆகியோர் நகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் பொதுமக்களின் அடிப்படை தேவையான சுகாதார பணிகள், குடிநீர் வழங்கல், தெரு விளக்கு பணிகளை துரிதமாக கண்காணிக்கவும் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு கூட்டத்திற்கும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் அலுவலக ஆய்வு கூட்டங்களுக்கும் உரிய நேரத்தில் சென்று கலந்து கொள்ளவும்,

தேர்வு நிலையில் உள்ள திருச்செங்கோடு நகராட்சிக்கு புதியதாக 2 எண்ணிக்கையில் SCORPIO வாகனம் மற்றும் 2 எண்ணிக்கையில் BOLERO வாகனங்கள் என மொத்தம் 4 (நான்கு) புதிய வாகனங்களை முழு மானியத்தில் கொள்முதல் செய்து வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட புதிய வாகனங்கள் கொள்முதல் செய்து வழங்கக்கோரும் கருத்துருக்கள் அரசிற்கு உடன் சமர்ப்பிக்க வேண்டி இருந்ததால் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 2267 /2022/இ1**

**நகர் மன்ற தீர்மானம் எண்.83 , நாள்.07.04.2022.**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 4**

அரசாணை எண்.71, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.13.09.2021–இன்படி, நமக்கு நாமே திட்டம் 2021–22 (NNT)–இன் கீழ் கீழ்கண்ட பணியை மேற்கொள்ள, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.27519–23/2021/P2, நாள்.14.03.2022–ல், ரூ.11.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி 31.03.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :-

| வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளியின் படி கொடுத்துள்ள விலை விகிதம் % |
|---|---|---|---|
| திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.05, கோம்பை நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி (Unicode: 054005R131) | ரூ. 11.00 இலட்சம் | 1. M/s Stanely Hitech Construction Company Pvt Ltd, Tiruchengode .<br>2. Thiru.K.Senthilmurugan, Tiruchengode. | (-)0.07 % குறைவு<br>(+) 0.88 % அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள M/s Stanely Hitech Construction Company Pvt Ltd, Tiruchengode நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி விலையான மதிப்பீட்டை விட (-)0.07% குறைவு கொடுத்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–)0.07% குறைவாக கொடுத்துள்ள M/s Stanely Hitech Construction Company Pvt Ltd, Tiruchengode அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

2. மேற்கண்ட பணியின் செலவினத்தை நமக்கு நாமே திட்டம் 2021–22 (NNT)-ன் கீழ் பொதுமக்கள் பங்களிப்பு தொகையிலிருந்து (மூன்றில் ஒரு பங்கு) மற்றும் திட்ட நிதியிலிருந்தும் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 8624/2021/இ1–2**

**நகர் மன்ற தீர்மானம் எண்.84 , நாள்.07.04.2022.**

மதிப்பீட்டை விட (–)0.07% குறைவாக கொடுத்துள்ள M/s Stanely Hitech Construction Company Pvt Ltd, Tiruchengode அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.5**

திருச்செங்கோடு நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TN 34 D 3972 டிப்பர் லாரியில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்து தகுதி சான்று புதுப்பித்து தரும் பணிக்கு 15.03.2022 –ல் ஒப்பந்தபுள்ளி கோரும் அறிவிப்பு வழங்கப்பட்டு 30.03.2021 அன்று வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் விவரம் பின்வருமாறு

| வ.எண் | ஒப்பந்தபுள்ளி வழங்கிய நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தபுள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை | ஒப்பீடு |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ வெள்ளிங்கிரி ஆட்டோ ஒர்க்ஸ், திருச்செங்கோடு. | ரூ.97055/– | குறைவு |
| 2 | சுப்ரீம் கார்ஸ், நாமக்கல் | ரூ.98884/– | அதிகம் |

மேற்காணும் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி வழங்கிய வரிசை எண்.1 –ல் காணும் ஸ்ரீ வெள்ளிங்கிரி ஆட்டோ ஒர்க்ஸ், திருச்செங்கோடு என்ற நிறுவனத்திற்கு TN 34 D 3972 வாகனத்திற்கு தகுதி சான்று புதுப்பிக்க பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. குறைவான ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஸ்ரீ வெள்ளிங்கிரி ஆட்டோ ஒர்க்ஸ், திருச்செங்கோடு என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.1163/22/எச்2**

**நகர் மன்ற தீர்மானம் எண்.85 , நாள்.07.04.2022.**

குறைவான ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஸ்ரீ வெள்ளிங்கிரி ஆட்டோ ஒர்க்ஸ், திருச்செங்கோடு என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க்கப்பட்டு அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.6**

. திருச்செங்கோடு நகராட்சியில் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து 2006 –ல் பணி நிரந்தரம் செய்யப்பட்ட 16 நபர்கள் தினக்கூலி பணி காலத்தில் 50 % கணக்கில் எடுத்துக் கொண்டு பழைய ஓய்வூதிய திட்டத்தில் சேர்க்ககோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் திருச்செங்கோடு நகராட்சி ஆணையாளரை நான்காம் எதிர் மனுதாரராக சேர்த்து 16 வழக்குகள் தொடரப்பட்டது. இவ்வழக்குகள் கடந்த 06.06.2018 –ல் நகராட்சிக்கு எதிராக தீர்ப்பு வரப்பெற்ற நிலையில் இத்தீர்ப்பாணையை ஆட்சேபித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் 16 வழக்குகள் சம்மந்தப்பட்ட பணியாளர்களுக்கு எதிராக தொடரப்பட்டது. இவ்வழக்குகள் கொரோனா காலங்களில் காலதாமதமாக மேல்முறையீடு செய்யப்பட்டதால் சென்னை உயர்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்ட காலதாமத கட்டணம் ஒரு வழக்கிற்கு ரூ.2000–/ வீதம் 16 வழக்குகளுக்கு ரூ.32,000/–ஐ ALL THE CHILDREN TRUST, VYASARPADI, CHENNAI – 39 என்ற அறக்கட்டளைக்கு வங்கி வரைவோலை எடுத்து அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. வழக்குகளின் முக்கியத்துவம் கருதி 16 வழங்குகளுக்கு செலுத்த வேண்டிய கட்டணத்தொகை ரூ.32,000/–ஐ ALL THE CHILDREN TRUST, VYASARPADI, CHENNAI – 39 என்ற அறக்கட்டளைக்கு வங்கி வரைவோலை எடுத்து அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.
3. இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.7546/2017/எப்3**

**<u>நகர் மன்ற தீர்மானம் எண்.86 , நாள்.07.04.2022.</u>**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.7**

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான அணிமூர் குப்பைக்கிடங்கில் கடந்த 04.03.2022 அன்று தீ விபத்து ஏற்பட்டதின் காரணமாக அவ்வூரில் வசிக்கும் மக்கள் குப்பைக்கிடங்கினுள் நகராட்சி வாகனங்கள் செல்ல எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். மேலும் அணிமூர் உரக்கிடங்கிற்குள் அமைக்கப்பட்டுள்ள வளமீட்பு பூங்காவிற்கு (RRC) மக்காத குப்பைகளை எடுத்துச் சென்று பிரிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் தற்போது Recycling Solutions, Erode என்ற தனியார் தன்னார்வ நிறுவனம் மக்காத குப்பைகளை (Dry Waste) தரம் பிரித்து இலவசமாக இறுதியாக்கம் செய்து தர முன்வந்துள்ளனர். எனவே, நகராட்சிக்கு செலவினம் ஏதுமின்றி மக்காத குப்பைகளை தரம் பிரிக்கவும் இறுதியாக்கம் செய்யவும் அணிமூர் உரக்கிடங்கிற்கு செல்லும் மக்காத குப்பைகளை நகரில் உள்ள 4 நூண்உரக்கூடங்களில் மேற்கண்ட நிறுவனத்தின் மூலம் கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு மன்றம் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>நிபந்தனைகள்:</u>**

1. ஒப்பந்ததாரருக்கோ / நிறுவனத்திற்கோ வழங்கப்படும் உத்தரவிற்கான இப்பணியினை உத்தரவு பெற்றவர் உள் குத்தகைக்கோ அல்லது உள் ஒப்பந்திற்கோ அல்லது மாற்று நபருக்கோ விடக்கூடாது. அவ்வாறு விடப்பட்டதென நகராட்சி கவனத்திற்கு வரப்பெற்றால் ஒப்பந்தம் ரத்து உடனடியாக செய்யப்படுவதுடன், மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதனால் ஏற்படும் சகல இழப்பினையும் ஒப்பந்ததாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.
2. இவ்வொப்பந்த கால அளவு ஒரு வருட காலமாகும். ஆனால் ஒப்பந்த காலத்தில் பணியினை மேற்கொண்டு வரும் நிறுவனத்தின் ஒப்பந்ததாரரின் திறமை, தகுதி ஆகியவை கொண்டும், பணியின் தரத்தை பொருத்தும் ஒப்பந்த காலத்தில் வேலை உத்தரவை ரத்து செய்யவோ அல்லது கால அளவைக் குறைத்துக் கொள்ளவோ நகராட்சி ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு.
3. ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு அளிக்கப்பட்ட பின்னர் வேலையை மேற்கொள்ளாமல் இருந்தாலோ அல்லது தாமதமாக துவங்கினாலோ அதனால் ஏற்படும் கூடுதல் செலவுத்தொகையை ஒப்பந்த நிறுவனமே ஏற்றுக் கொள்ள வேண்டும்.
4. வேலைக்காக எவ்வித பணமும் வழங்கப்படமாட்டாது. ஒப்பந்த நிறுவனமும் நகராட்சிக்கு பணம் செலுத்த தேவையில்லை.
5. தினசரி குறைந்தது 30 பணியாளர்களை பணியமர்த்தப்பட வேண்டும். மேலும் 20 வயது முதல் 60 வயதுக்குள் உடல் ஆரோக்கியம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.
6. ஒப்பந்ததாரப் பணியாளர்களுக்கு தனது சொந்த செலவிலேயே ஊதியம் வழங்க வேண்டும். நகராட்சியிலிருந்து வழங்கப்படமாட்டாது.
7. அரசினால் அவ்வப்போது அறிவிக்கப்படும் வரியினங்கள் அனைத்தும் ஒப்பந்ததாரரையே சார்ந்ததாகும்.
8. ஒப்பந்ததாரர் பணியாளர்களை 8 மணி நேரம் மட்டுமே வேலை செய்ய அனுமதிக்க வேண்டும். 18 வயத்திக்குட்பட்ட குழந்தை தொழிலாளர்களை பணியமர்த்தக்கூடாது.

9. ஒவ்வொரு பணியாளருக்கும் இ.எஸ்.ஐ, இ.பி.எப். காப்பீடு செலுத்தும் பட்டியலை வருகை பதிவேட்டுடன் இணைத்து ஒப்பந்ததாரர் தனது சொந்த பொறுப்பில் மாதந்தோறும் வைத்துக் கொள்ள வேண்டும்.

10. பணியின் போது பணியாளர்களுக்கு ஏதேனும் விபத்து, அசம்பாவிதம், உடல்சேதம், பொருள் சேதம் ஏற்பட்டால் ஒப்பந்ததாரரே பொறுப்பேற்று சரிசெய்து கொள்ளவேண்டும். நிர்வாகம் எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.

11. ஒப்பந்ததாரர் பணியாளர்களுக்கு தனது சொந்தப் பொறுப்பில் தளவாட சாமான்கள், அடையாள அட்டை, பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் சீருடைகள் வழங்கி பணியின் போது அவற்றை அணிந்து பணி புரிவதை உறுதிப்படுத்த வேண்டும்.

12. தங்களது பணியாளர்கள் துப்புரவு பணிபுரியும் பகுதிகளில் துப்புரவு ஆய்வர், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் பொதுமக்கள் கூறும் குறைபாடுகளை கனிவுடன் கேட்டு சரிசெய்ய வேண்டும்.

13. நகராட்சி ஆணையர், சுகாதார அலுவலர் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் அவ்வப்போது தெரிவிக்கும் குறிப்பினைப் பெற்று அதன்படி உலர்கழிவுகள் பிரிக்கும் பணியினை மேற்கொள்ள வேண்டும்.

14. உலர்கழிவுகள் பிரிக்கும் பணிகளை நிறுத்துவதாயின் குறைந்தது ஒரு மாதத்திற்கு முன்னரே முன் அறிவிப்பு வழங்கி அனுமதி பெற்ற பின்னரே நிறுத்த வேண்டும்.

15. உலர்கழிவுகள் பிரிக்கும் பணிகளில் அதிருப்தி ஏற்பட்டால் உடனடியாக ஒப்பந்தத்தினை ரத்து செய்யவும் ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு.

16. குப்பைகளை எந்த நிலையிலும் எந்த இடத்திலும் கொட்டி எரிக்க கூடாது அவ்வாறு செய்தால் ஒவ்வொரு நிகழ்வுக்கும் ரூ.500/— தண்டம் விதிக்கப்படும்.

17. இவ்வொப்பந்தமானது முற்றிலும் நகராட்சி நிர்வாகத்திற்கும் ஒப்பந்தம் பெறும் நிறுவனத்திற்கும் உட்பட்டது ஆகும். ஒப்பந்தம் மேற்கொள்ளும் நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்களையும், நகராட்சி நிர்வாகத்தையும் எவ்விதத்திலும் தொடர்புபடுத்தக்கூடாது.

18. ஒப்பந்ததாரர் பணியாளர்களை தம்முடைய கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள வேண்டும். பணிபுரியும் பணியாளர்களின் பணி சம்பந்தமான எவ்வித கோரிக்கைகளுக்காகவும் நிர்வாகத்தை அணுக அனுமதிக்கக்கூடாது.

19. இந்நகராட்சி பகுதிகள் தவிர வேறு பகுதிகளில் இருந்து கழிவுகள் எதையும் நுண் உர மையம் மற்றும் உரக்கிடங்கிற்கு எடுத்து வரக்கூடாது. அவ்வாறு எதுவும் அதிகாரிகள் ஆய்வில் கண்டறியப்பட்டால் ஒப்பந்தம் ரத்து செய்யப்படுவதுடன் அபராத தொகை வசூல் செய்யப்படும்.

20. இவ்வுத்தரவு கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் இந்நகராட்சியில் ஒப்பந்த பணியில் ஈடுபடும் பணியாளர்கள் பற்றிய விபரத்தை தெரிவித்து பதிவு செய்ததற்கான அறிக்கை சமர்பிக்க வேண்டும்.

21. பணிபுரியும் வளாகத்தில் உள்ள நகராட்சியின் அசையும் மற்றும் அசையா சொத்துக்களை அனுபவிக்கவோ அல்லது சேதப்படுத்தவோ கூடாது.

22. இவ்வொப்பந்தத்தின் அடிப்படையில் பின்னாளில் எவ்வித சலுகையும் நகராட்சியில் எதிர்பார்க்க கூடாது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சிக்கு செலவினம் ஏதுமின்றி இலவசமாக உலர்கழிவுகளை பிரிக்கும் பணிக்கு சம்மதித்துள்ள Recycling Solutions, Erode என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்படுத்தி பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 2188/2022/எச்1**

**நகர் மன்ற தீர்மானம் எண்.87 , நாள்.07.04.2022.**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.8**

திருச்செங்கோடு நகராட்சியில் தினசரி சேகரமாகும் எதற்கும் உபயோகமில்லாத பிளாஸ்டிக்கழிவுகள் அல்ட்ரா டெக் சிமெண்ட் ஆலை, அரியலூர் என்ற நிறுவனத்திற்கு எரிபொருள் பயன்பாட்டிற்க்காக இலவசமாக அனுப்பப்பட்டு வந்தது.மேற்கண்ட நிறுவனத்துடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் 12.01.2022 –ம் தேதிவுடன் முடிவடைந்துவிட்டதாலும், மேற்கண்ட நிறுவனம் திருச்செங்கோட்டில் இருந்து 200 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளதாலும் எரிபொருள் செலவு அதிகமாகிறது. எனவே தற்போது பயன்பாடற்ற பிளாஸ்டிக் கழிவுகளை திருச்செங்கோடு நகராட்சிக்கு 15 கிலோமீட்டர் மட்டுமே தூரமுள்ள இந்தியா சிமெண்ட் லிமிடெட், சங்ககிரி மேற்கு , நாமக்கல் மாவட்டம் என்ற நிறுவனத்துடன் புதியதாக புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. உபயோகமில்லாத பிளாஸ்டிக்கழிவுகள் இந்தியா சிமெண்ட் லிமிடெட், சங்ககிரி மேற்கு , நாமக்கல் மாவட்டம் என்ற நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. நகராட்சி வாகனம் மூலம் உபயோகமில்லாத பிளாஸ்டிக்கழிவுகளை இந்தியா சிமெண்ட் லிமிடெட், சங்ககிரி மேற்கு , நாமக்கல் மாவட்டம் என்ற நிறுவனத்திற்கு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 11708/2012/எச்1**

**நகர் மன்ற தீர்மானம் எண்.88 , நாள்.07.04.2022.**

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.9**

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.1, (Ward – A, Block No.06, Survey No.25/1 and TSLR No.73) சீத்தாராம்பாளையம் நகர ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் கட்டிடம் கட்டும் பணி மதிப்பீடு ரூ.40.00 இலட்சத்திற்கு தேசிய சுகாதாரத் திட்டத்தின் கீழ் நிர்வாக செயலாளர், மாவட்ட நலவாழ்வு சங்கம், நாமக்கல் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண். 1509/B4/2016, நாள்.31.03.2022–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் உரிய தொழில்நுட்ப அனுமதி பெற விரிவான திட்ட மதிப்பீடுகள் நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர், சேலம் அவர்களுக்கு அனுப்பவும் மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 8587/2020/இ1**

**நகர் மன்ற தீர்மானம் எண்.89 , நாள்.07.04.2022.**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.10

திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான கீழ்வரும் மாத உரிம இன கடைகளுக்கு 31.03.2022–வுடன் மூன்றாண்டு கால உரிமம் முடிவுற்று, உரிமம் புதுப்பிக்கப்பட உரிம தாரரர்களிடமிருந்து எந்தவொறு விண்ணப்பமும் வரப்படாததாலும், வாடகையினை முழுவதும் செலுத்தாமல் நிலுவையாக உள்ளதாலும் நகராட்சியால் பூட்டி சீல் வைக்கப்பட்டது. எனவே மேற்படி கடையினை மறு ஏலம் விடவும், அதனால் ஏற்படும் இழப்பீட்டிற்கு கடையின் உரிமதாரர் பெயரிலுள்ள வைப்புத்தொகையில் ஈடு செய்யவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | கடையின் பெயர் |
|---|---|
| 1 | பழைய பேருந்து நிலைய பழைய கடை எண். 15 |
| 2 | பழைய பேருந்து நிலைய பழைய கடை எண். 16 |
| 3 | பழைய பேருந்து நிலைய பழைய கடை எண். 21 |
| 4 | பழைய பேருந்து நிலைய பழைய கடை எண். 26 |
| 5 | புதிய பேருந்து நிலைய கடை எண்.17 |
| 6 | புதிய பேருந்து நிலைய கடை எண்.57 |
| 7 | சுமையுந்து நிலைய குடோன்.3 |
| 8 | சுமையுந்து நிலைய குடோன்.13 |
| 9 | சுமையுந்து நிலைய அலுவலக அறை.3 |
| 10 | வாரச்சந்தை மூன்றாம் கட்ட கடை எண்.1 |
| 11 | சின்னதெப்பகுளம் தரைதளம் கடை எண்.4 |

<u>அலுவலக குறிப்பு;-</u>

மன்றம் ஒப்புதலளிக்கலாம்.

கோப்பு எண். 2098/2022/அ3

<u>நகர் மன்ற தீர்மானம் எண்.90 , நாள்.07.04.2022.</u>

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

ஒம்/ நளினிசுரேஷ்பாபு,
நகர் மன்ற தலைவர்,
திருச்செங்கோடு நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
திருச்செஙகோடு நகராட்சி.